முருகப்பெருமான் துணை

**மகான் கோரக்கர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.06.2023**, வியாழக்கிழமை

1. தவபலமிக்க ஞான குருவே
 தருமனாக வந்த அரங்கனே
 அவதார ஞான வள்ளலே
 அறமாக வாழும் தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
 தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
 ஆசிதனை சோபகிருது விடைதிங்கள்
 அய்யைந்து திகதி குருவாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் **25** ம் நாள், **08.06.2023**, வியாழக்கிழமை)

3. வாரமதில் கோரக்கர் யானும்
 வழங்குவேன் அரங்கன் சீடர்கள்
 சோரமில்லா மேன்மை அடைய
 சுத்தநெறி ஏற்ற அன்பர்கட்கு
4. அன்பர்கட்கு பிணி கண்டம்
 ஆபத்து அனுகா மீட்பு
 இன்பமான அரங்கன் தயவால்
 இவ்வுலகில் கண்டடைய நேரும்
5. நேருமைபட தன் கடமை சேவை
 நீதிகெடா வாழ்வு நடத்திடும்
 பெருமைமிக்க அரங்கன் சீடர்கட்கு
 பொருள் வளம் குன்றா வாழ்வு
6. வாழ்வு நிறைந்திட பரிபூரண ஆசி
 வகையறியா ருண வாட்டம்
 தாழ்வென கண்டவரும் கூட
 தவராஜனை தொடர்ந்து அனுகி
7. அனுகி அருள் தீட்சை பலம்
 அடைவதுடன் அன்னதானமதை
 அனுகித் தொண்டு புரிந்திட
 அகலும் அனைத்துச்சிக்கலும்

8. சிக்கலில்லா ஞான வாழ்வு
சீடர்களாகி நாளும் தொடர
பக்குவம் மனத்தெளிவு கூடி
பண்புள்ள ஞானவான்களாகி

9. ஆகியே தன்வினை களைவதுடன்
அடுத்தவரின் வினை போக்கியே
அகிலத்தில் தனித்துவம் பெறுவர்
அரங்கமகான் வழி தன்னில்

10. தன்னிலே ஞானவாழ்வு தனக்கு
தக்கபடி அடையாளம் கண்டு
இன்னல் போக்கி வாழுகின்ற
ஏகாந்த நிலைதனை கண்டு

11. கண்டுமே ஞானிகள் ஆகி
கலிமாயை இடர் அனைத்தும்
தொண்டுவழி வென்று சிறப்பர்
தேசமதில் ஞான ஆட்சித் தருவர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—